REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 5உ திங்கள் (20—12—54) ★ ★ வெளியூர்: மார்கழி 6உ செவ்வாய் (21—12—54) [இதழ் 162

## பெண்களுமா அப்படி?

மங்களூர், டிச. 18—

இங்குள்ள முந்திரிப்பருப்புத் தொழிற்சாலை ஒன்றில் பணி புரியும் பெண் தொழிலாளிகளின் இரு 'கோஷ்டி'களிடையே ஏற்பட்ட அடிதடியின் விளைவாக 15 பேர்களுக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது; ஒரு பெண்மணி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்று செய்திகள் கூறுகின்றன.

போலீசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர் எனத் தெரிகிறது.

# காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் இரட்டை போக்கு

## மசோதாவைஎதிர்ப்பவரும் ஆதரிக்கப்போகும் அலங்கோலம்!

### கட்சிக் கட்டுப்பாட்டிற்கு மனச்சாட்சியை பலியிடும் பிற்போக்கு

நாடக மசோதாவை சட்டமாக்குவதில் காமராசர் பிடிவாதம்!

(நமது தனி நிருபர்)

புதிய நாடக மசோதா எதிர்கால நாடகக் கலையையே கொலை செய்துவிடும் கொலை வாள் எனும் கருத்து, விஷயமறிந்த மக்கள் அனைவரிடமும் பரவலாகப் பரவி உள்ளது.

மசோதாவை, நடிகத் துறையினர் அனைவரும் எதிர்க்கின்றனர். நாட்டில் இருக்கும் அரசியல் கட்சிகள் எல்லாம், மசோதாவைத் தீவிரமாக எதிர்க்கின்றன.

செய்தி இதழ்களிலும், 'இந்து', 'சுதேசமித்திரன்' நீங்கலாக, மற்ற இதழ்கள் ஒரே முகமாக மசோதா சட்டமாவதை விரும்பாமல், மசோதாவின் அவசியமின்மையை விளக்கிக் கூறி இருக்கின்றன.

அதை ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட பொறுக்குக் குழு உறுப்பினர்களில் பலரும், மசோதாவின் தீமைகளை விளக்கிஎழுதியுள்ளனர்.

மசோதாவை எதிர்க்கும் மேற்படி கூட்டத்தில், காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் சிலரும் சேர்ந்துள்ளனர். காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் கூட்டம் முதன் மந்திரி காமராசர் தலைமையில் கூடியுள்ளது. இரண்டு சபையிலுமுள்ள 164 காங்கிரஸ் உறுப்பினர்களில் 84 உறுப்பினர்கள் மட்டுமே, மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் மசோதாவை எதிர்த்து சில காங்கிரஸ் உறுப்பினர்கள் காரசாரமாகப் பேசினதுடன், காமராசர் முதல் மந்திரி பதவியேற்றதால் உருவான அமைதியான சூழ்நிலை, மசோதா சட்டமாக்கப்படுவதால், மீண்டும் கொந்தளிக்கத் துவங்கினாலும் துவங்கக்கூடும் எனவும் எச்சரித்தனராம். அக்குழப்ப நிலை ஏற்படுவதும் ஏற்படாமல் இருப்பதும், மசோதாவை சட்டமாக்காமல் கைவிடுவதைப் பொறுத்திருக்கிறது எனவும், அவ்வுறுப்பினர்கள் மாற்றமுரைத்தார்களாம்.

அவைகளை, தம் இயல்புப்படி அமைதியாகக் கேட்டிருந்த முதல் மந்திரி காமராசர், மசோதாவைக் கைவிட இப்பொழுது முன்வந்தால், எதிர்ப்புக்கு அஞ்சி காங்கிரஸ் கட்சியினர் மசோதாவைக் கைவிட்டு விட்டனர் எனக் கேலி பிறக்கும் எனவும், அக்கேலிக்கு இடங் கொடுக்காமல் இருக்கவேண்டுமானால், மசோதாவை உடனடியாகச் சட்டமாக்கியே தீரவேண்டும் எனவும், சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினர் அனைவரும் மசோதாவை ஆதரித்து சட்டமாக்கிவிட வேண்டுமெனவும், விளக்கமும், கட்டளையும் ஏககாலத்தில் கொடுத்துள்ளாராம். இப்படி ஒரு செய்தியை தமிழ் தின இதழ் ஒன்று தந்துள்ளது. இத்தகவல் பொய்யா மெய்யா என முடிவு கட்டுவது ஒருவராலும் முடியாத ஒன்ருக இருந்தபோதிலும், அச்செய்தி உண்மையானதாக இருக்குமானால், முதல் மந்திரியின் போக்கு—இல்லை—பிடிவாதம் வருந்தக்கூடியதேயாகும்.

காங்கிரஸ் கட்சியினர், எதிர்ப்புக்குப் பயந்து மசோதாவை கைவிட்டுவிட்டனர் என்ற ஏச்சு கிளம்பும்; எனவே, அந்த ஏச்சுக்கு இரையாகாமல் தப்ப மசோதாவை சட்டமாக்கக் காங்கிரஸ் கட்சியினர் முன்வரவேண்டும் என, பெரும்பான்மையினர் விருப்பத்திற்கு ஒரு ஆட்சியினர் இணங்குவது, கேலிக்குரிய விஷயமாக காமராஜர் பொருள் கொண்ட போக்கை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஏதோ ஒரு காரணத்திற்காக, நல்லெண்ணத்துடன் ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள ஒரு ஆட்சியாளர் முன்வந்த போதிலும், அந்த நடவடிக்கை தீமை தரக்கூடியது என மக்களில் பெருந்தொகையினர் எதிர்க்கும்பொழுது, அந்நடவடிக்கையைக் கைவிடுவதோ, அல்லது தள்ளிப்போடுவதோதான், அவ்வாட்சியாளரின் கடமையாகும். அதை விடுத்து எடுத்துக்கொண்டநடவடிக்கையை, எவர் எதிர்த்தாலும் நிறைவேற்றியே தீருவேன் எனக் கூறுவது, எதிர்ப்பை மதிக்காது நடக்கும் அலட்சிய புத்தியை உணர்த்துவது மட்டுமல்லாமல், மக்களாட்சி முறையிலிருந்து விலகிவிட்டதாகவும் முடியும்.

புதிய கல்வித் திட்டத்திற்கு ஏற்பட்ட பெரும் எதிர்ப்பை மதித்து, திட்டத்தைக் கைவிட முன்வராது, எதிர்ப்பை அலட்சியப்படுத்தி இறுமாப்பாக நடந்துகொண்டதின் விளைவு, முதன் மந்திரி காமராசர் அறியாததல்ல. நாடக மசோதாவைக் கைவிட்டுவிட முன்வந்தால், 'எதிர்ப்புக்குப் பயந்து காங்கிரஸ் கட்சியினர் மசோதாவை கைவிட்டனர்' என கேலி கிளம்பும் எனக் காமராசர் கூறினதாகக் கூறப்படும் கூற்றையே, எதிர்ப்புக்கஞ்சி புதிய கல்வித் திட்டத்தைக் கைவிட ஆச்சாரியாரும் மறுத்தார் எனக் கொள்வது, எவ்வகையிலும் தவறுடையதாகாது.

(4-ம் பக்கம் பார்க்க)

## டிட்டோவின் முதல் தோல்வி?

புதுடில்லி, டிச. 18—

இந்தியா வந்துள்ள யூகோ சமதர்மக் குடியரசுத் தலைவர் மார்ஷல் டிட்டோ அவர்கள், தம் வாழ்நாளிலேயே அடைந்திராத தோல்வியை முதல் முதலாக, இங்குள்ள செங்கோட்டையில் பெற்ருர். அதுவரை, என்றும் கண்டிராத அணில் ஒன்றை, அங்கு உலாவிட அவர் கண்டார். எப்படியாவது அதை புகைப்படம் பிடித்துவிடவேண்டுமென, தனது புகைப்படக் கருவியை நேர்படுத்தி முயற்சித்தார். அணில் ஓடியது; அவரும் பின்தொடர்ந்து ஓடினர். இறுதியில், அவர்கண்களிலிருந்து அச்சிறு பிராணி மறைந்து விட்டது.

சில நிமிடத்திற்கெல்லாம், மீண்டும் அந்த அணில் டிட்டோ முன் காட்சியளித்தது. அதைப் புகைப்படமெடுக்க, அவர் மேற்கொண்ட இரண்டாம் முயற்சியும் தோல்வியுற்றது!

## இந்தியப் பத்திரிகைமீது தெ. ஆ. சர்க்கார் நடவடிக்கை

புதுடில்லி, டிச. 19—

'மார்ச் ஆப் இந்தியா' என்னும் இந்தியப் பத்திரிகையை தென் ஆப்பிரிக்க சர்க்கார் தடை செய்துவிட்டது.

## எம். ஆர். இராதாவை மீட்க முயற்சி

### நடிகர் கோரிக்கைக்கு முதல் மந்திரி இசைவு

கைது செய்து காவலில் வைக்கப்பட்டுள்ள நடிகர் தோழர் எம். ஆர். இராதா அவர்களை விடுவிக்கக் கோரி தென்னிந்திய நடிகர் சங்க சார்பில் நடிகர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், டி. கே. சண்முகம், டி. என். சிவதாணு, டி. வி. நாராயணசாமி, எஸ். வி. சகஸ்ரநாமம் ஆகியோரடங்கிய தூதுக் குழு ஒன்று திரு. பி. வி. சுந்தரம் அவர்கள் தலைமையில், முதன் மந்திரி திரு. காமராசரை அவரது இல்லத்தில் சந்தித்து விஷயத்தை எடுத்துரைத்திருக்கின்றனர்.

முதன் மந்திரி, இராதா கைது செய்யப்பட்டது குறித்து விசாரித்து தன்னாலாவன செய்வதாக உறுதி மொழி கூறியிருப்பதாகத் தெரிகிறது.

★

### சென்னையில் கண்டனம்

சென்னை, டிச. 20—

சென்னை சட்ட சபையில் விவாதத்திற்கு வரும் நாடகத் தடை மசோதாவை எதிர்த்து நேற்று மாலை ஒரு மாபெரும் ஊர்வலமும், கண்டனக் கூட்டமும் நடைபெற்றது.

தோழர் இராதா கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், நாடகத் தடை மசோதாவைக் கைவிடக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்திற்கு தோழர் எஸ். குருசாமி தலைமை தாங்கினர். தோழர்கள் ஏ. பி. ஜனார்த்தனம், சுயம்பிரகாசம் எம். எல். ஏ., டி. சண்முகம் எம். எல். ஏ., ஆகியோரும், மற்றும்பலரும் கலந்துகொண்டனர்.

★

### தோழர் இராதா கைது

திருச்சி, டிச. 18—

திருச்சியில் தோழர் எம். ஆர். இராதா அவர்களால் நடிக்கப்பட இருந்த 'இராமாயண' நாடகத்திற்கு எதிராக அதிகாரிகள் 144-வது இ. பி. கோ.-வின் கீழ் தடை விதித்திருந்ததை மீறி இன்று இரவு இராமனாக நடிக்க இருந்த தோழர் இராதா அவர்கள் பகல் 12-15 மணிக்குக் கைது செய்யப்பட்டார் எனத் தெரிகிறது.

அவரை கி. பு. கோ. 151வது பிரிவுப்படி முன்னெச்சரிக்கையாக போலீசார் கைது செய்தனர் என்றும், அவர் இப்போது திருச்சி மத்திய சிறையில் கைதியாக வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

# இராவணன் பார்ப்பனக் குடிமகனும்!

## சாம வேதத்தின் அதிகாரியாம்!

### 'ஜகத்குரு' சங்கராச்சாரியின் குழப்பம்

சென்னை, டிச. 19—

"தென்னிலங்கை வேந்தன் இராவணன் ஒரு பார்ப்பனன்; பிரம்மனின் நேரடியான வாரிசுகளில் ஒருவன்; சாம வேதத்தின் அதிகாரி,"

என்று, காஞ்சி காமகோடிபீட அதிபர் சங்கராச்சாரியார் கூறுகிறார்' டாக்டர் மகாலிங்கம் என்பவருடன் சங்கராச்சாரியார் உரையாடல் நடத்தியபோது இப்படிக் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

"தன்னுடைய தவத்தினால் இராவணன் ஏராளமான சக்தியைப் பெற்றான்; யார் தனக்கு இவ்வளவு பெரிய சக்திகளை அளித்தாரோ, அவரையே அவன் பின்னர் எதிர்த்தான்; தன் நினைவு இழந்து, நேர்மையான பாதையிலிருந்து தவறினான்; பின்னர் அதன் பலனை அனுபவித்தான்," என்றும் சங்கராச்சாரியார் கூறினாராம்.

"வால்மீகி எழுத்தறிவில்லாத ஒரு வேடன்; தன்னுடைய நம்பிக்கையினாலும், பக்தியினாலும், ஒரு அழியாக் காவியத்தின் ஆசிரியராக உயர்ந்தார்," என்றும் சங்கராச்சாரியார் கூறினாரெனத் தெரிகிறது.

## வங்கப் போலீசார் உண்ணாவிரதம் நின்றது

கல்கத்தா, டிச. 19—

ஒரு வார காலமாக நடைபெற்று வந்த போலீசார் உண்ணாவிரதம் நின்றுவிட்டது.

சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள 600 போலீசார்மீது இன்னும் சர்க்காருக்கு சந்தேகம் இருக்கிறதாம். அவர்கள் வேலைக்கு அனுப்பப்படுமுன் பரிசோதனை செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது.

## நேபாள மந்திரி சபையில் நெருக்கடி

நேபாளத்தில் மீண்டும் மந்திரி சபை நெருக்கடி வலுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரதமர் எம். பி. கொய்ராலா, தனது மந்திரி சபையில் உள்நாட்டிலாகா அமைச்சராயிருக்கும் தங்கா பிரசாத் என்பவர் ராஜினாமாச் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்ற உள்நாட்டமைச்சர் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

• எப்படியாயினும் மந்திரி சபையில் மாற்றம் ஏற்படுவது நிச்சயம் எனவும் சொல்லப்படுகிறது.

பிரதமர் கட்சியான ராஷ்ட்ரீய பிரஜா கட்சி இரண்டொரு தினங்களில் கூடி மந்திரி சபை பற்றி விவாதிக்கும் என்பதுடன் உள்நாட்டமைச்சர் பிரசாதின் கட்சியான பிரஜா பரிஷத் கட்சியின் செயற்குழுவும் கூடி இது பற்றி விவாதிக்குமெனவும் அரசியல் வட்டாரச் செய்திகள் கூறுகின்றன.

டி. ஆர். ரெக்மி, ஜெனரல் மகாவீர் என்ற மற்ற இரு மந்திரிகளையும், மந்திரி சபையில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகக் கூறி உடன் காட்மண்டு வருமாறு பிரதமர் எம். பி. கொய்ராலா அழைத்துள்ளாராம்.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 20—12—1954 திங்கள்


# மனித உள்ளம் வேண்டும்

மேற்கு வங்க மாநிலத்தில் போலீசார் சென்ற சில நாட்களாக உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள்.

2,500 போலீசார் உண்ணாவிரதப் போரில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும், அவர்களில் பலர் மருத்துவமனையிலும் ஆயிரத்திற்கு அதிகமானபேர் கைது செய்யப்பட்டு காவலிலும் வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் செய்திகள் கூறுகின்றன.

அவர்களைப் போலவே சுமார் ஆயிரம் சிறைக் காவலாளிகளும் (வார்டர்கள்) உண்ணாவிரதப் போரினை துவங்கியுள்ளனர் எனத் தெரிகிறது.

உண்ணாவிரதமிருப்பதற்குக் காரணமாக போலீசார் கூறியுள்ளவை எல்லாம், தங்களின் அடிப்படைச் சம்பளம் ரூ. 35-ஆக இருப்பதை ரூ. 55-ஆக உயர்த்த வேண்டுமென்பதுடன், பஞ்சப்படி, வீட்டு வாடகை போன்றவைகளையும் உயர்த்தித் தர வேண்டுமென்ற தங்கள் கோரிக்கைகளை அரசாங்கம் செவி மடுக்க மறுத்துவிட்டதென்பதேயாகும்.

மேற்கு வங்க மாநிலத்தில் ஆண்டுக்கு ஒருமுறை அங்குள்ள காங்கிரஸ் ஆட்சியின் போக்கினை எதிர்த்துப் போராட்டம் நடப்பதும், அரசாங்கம் அடக்குமுறைகளின் எல்லைக்குச் சென்ற பின், போராடுவோரின் கோரிக்கைக்கு இணங்குவதும் வழக்கமான சம்பவமாகிவிட்டிருக்கிறதென்றால், அது மிகையாகாது.

கடந்த ஆண்டு துவக்கத்தில் 'டிராம்' கட்டணம் உயர்த்தப்படுவதை எதிர்த்து எல்லா இடதுசாரிக் கட்சியினரும் கண்டனம் தெரிவித்தும் அரசாங்கம் கேளாக்காதினராயிருந்ததினால் ஏற்பட்ட விளைவுகள் எல்லோரும் அறிந்ததே!

சென்ற ஆண்டு மத்தியில், ஆசிரியர்கள், தங்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையைப் பல வகைகளில் எடுத்துக் கூறியும், அரசாங்கம் நியாயத்திற்குக் கட்டுப்பட மறுத்ததின் விளைவாக அவர்கள் நேரடியான போராட்டத்தில் ஈடுபட்டு, தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிக் குண்டு இவையொத்த அத்தனை அடக்குமுறை அம்புகளையும் தாங்கிக் கொண்ட அவர்களின் இதய வலிமைக்கு முன், அரசாங்கத்தின் பிடிவாதம் பிடி சாம்பலானபின், ஆசிரியர்களும் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதில் வெற்றி கண்டனர்— தங்கள் தியாகத் தழும்புகளுக்குப் பரிசாக மேற்கு வங்க அரசு பணிவதைக் கண்டார்கள்.

இந்த ஆண்டு, போலிசார் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கின்றனர்.

சென்ற ஆண்டில் சென்னை நகர போலீசார் ஒரு புதிய முறையைத் தங்கள் நியாயமான கோரிக்கை நிறைவேற்றத்திற்காகக் கையாண்டனர் என்பதும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளத்தக்கது.

மேற்கு வங்க போலீசாரோ, ஒற்றுமை மிகுந்தவர்களாகவும், தங்கள் சக்தியை உணர்ந்தவர்களாகவும் காணப்படுகிறார்கள் என்பதற்கு, கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து 2,500 பேர் உண்ணாவிரதப் போரில் கட்டுப்பாடாகக் கலந்து கொண்டிருக்கின்றனர் என்பதே போதுமான சான்றாகும்.

ஒரு ஆட்சியில் அரசாங்க ஊழியர்களே-அதுவும் கட்டுப்பாடும் ஒழுங்கும் மிகுந்தவர்களாக இருந்து தீர வேண்டிய போலீஸ் இலாகாவினரே தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள இப்படி உண்ணாவிரதம் மேற்கொள்ளுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளது என்றால், அந்த ஆட்சியின் லட்சணத்தைப் புரிந்து கொள்ளவே இது ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

போலீசாரின் நிலையே இது வானால் அங்கு பொதுமக்களின் நிலை என்னவாயிருக்குமென்பது சொல்லாமலே விளங்கிவிடும். அவர்கள், தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள தீர்மானங்கள், கண்டனக் கூட்டங்கள், தூதுகுழுக்கள் போன்ற முறைகளைக் கையாண்டும் முடியாமற் போன காரணத்தினால் தானே, எல்லா இடதுசாரிக் கட்சிகளின் கூட்டு முன்னணியின்கீழ் திரண்டு, அரசாங்கத்திற்கு எதிராகப் போராடி, 'டிராம்' கட்டண உயர்வை அனுமதிக்க விடாமல் செய்தனர்.

இதனால், மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் ஆட்சி, மக்களின் நல்வாழ்வில் எவ்வளவு அக்கரை கொண்டுள்ளதென்பது தெள்ளெனத் தெரிகிறது.

ஆட்சியாளர்களின் அடக்குமுறை அம்புகளாய் பயன்படுபவர்கள் — பயன்படுத்தப்படுபவர்கள் போலீசார். அவர்கள் தான்—போலீஸ் இலாகாதான் ஒரு அரசாங்கத்திலேயே மிகவும் விசுவாசமும், கட்டுப்பாடும், ஒழுக்கமும் கொண்டவர்கள் எனக் கருதப்படுபவர்கள்.

அத்தகைய ஒரு 'பரம்பரை' குணம் கொண்ட போலீசார் எவ்வளவு புறக்கணிக்கப்பட்டிருந்தால்-தங்கள் கோரிக்கைகள் எத்தனை காலம் அலட்சியப் படுத்தப்பட்டிருந்தால், இன்று, 2,500 பேர் கட்டுப்பாடாக, ஒரு முகமாக உண்ணாவிரதத்தினை மேற்கொண்டிருப்பர்?

உயிர் ஊசலாட, வாழ வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் ஊஞ்சலாட, அன்ன ஆகாரமின்றி, கொடுக்கும் மருந்தையும் பருக மறுத்து, சிறைக் கோட்டம் புகுந்து அவதிப்படுகிறார்கள் என்பதிலிருந்தே அவர்களின் உள்ளக் கொதிப்பு நன்கு புரிந்துவிடும்.

மேலும், அவர்களையொட்டி சிறைக் காவலர்களும், தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள போலீசாரின் பாதையையே பின்பற்றியிருப்பதிலிருந்து, பொதுவாகத் தெரியும் உண்மையெல்லாம், மேற்கு வங்கத்தில் உள்ள காங்கிரஸ் அரசாங்கம், அங்குள்ள தங்களின் அரசாங்க ஊழியர்களையே அலட்சியப்படுத்தியுள்ளது என்பதுதான்.

போலீசாரின் போராட்டத்தை - அல்ல அல்ல - வாடித் துடிக்கும் அவர்களின் உள்ளக் கொதிப்பை அடக்க, வீண் விராப்புப் பேசுவதல்ல வழி.

உண்ணாவிரதமிருக்கும் 2,500 பேரில் ஆயிரம் பேர் சிறையில், எண்ணற்றோர் மருத்துவ மனையில்—என்கிற நிலை வளர்ந்துவிட்ட பிறகும் அரசாங்கத்தார் தங்களுடைய போலி கௌரவத்தை மனதில் எண்ணிக் கொண்டு, போலீசாரின் போராட்டத்தை அடக்குவதற்கு முற்பட்டனரேயன்றி, தாங்கள் இருந்த இடத்திலிருந்து இறங்கிவரக் காணோம்.

போலீசாரின் இத்தகைய தொரு போராட்டத்தை, அடக்கிவிடுவது ஒரு நவீன கால சர்க்காருக்குக் கடினமானதல்ல. ஆனால், இன்று போராட்டம் அடக்கப்பட்டுவிடுவதினாலேயே போலீசார் திருப்தி கொண்டுவிடமாட்டார்கள். இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் எதிர்காலத்தில் இந்த அதிருப்தி மேலும் பன்மடங்கு வளரத்தான் செய்யும்.

அந்த நிலை உருவாவது, இப்போதிருக்கிற அரசாங்கத்திற்கு மட்டுமன்றி, வருங்காலத்தில் அமையும் அரசாங்கத்திற்கும், நாட்டிற்கும் நல்லதல்ல—ஆபத்தானதுங்கூட!

"போலீஸ் இல்லாவிட்டால் என்ன? இதோ இராணுவம்? என்ன செய்கிறேன் பார்; சம்பள உயர்வா கேட்கிறாய்? அதற்காக உண்ணாவிரதமா இருக்கிறாய்? பதில் இதோ—வீடு போய் சேர்; வேலை கிடையாது" என்று அவர்களை மிரட்டுவதல்ல வழி!

அவர்களுடைய கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்றாவிடினும், கோரிக்கைகளை நுணுகி ஆராய்ந்து வெகு நியாயமானவை என்று தோன்றுபவைகளை மட்டுமாவது உடனடியாக நிறைவேற்ற முன் வருவதுடன், போராட்டத்தில் ஈடுபட்டோரை 'பழிவாங்குவதில்லை,' என்ற உறுதி மொழியும் தந்து, விவேகமாக செயலாற்ற வேண்டியதே இன்றைய மே. வ. ஆட்சியின் கடமையாகும். இதற்கு அவர்களுக்கு மனித உள்ளம் வேண்டும்.

## உம்மைக் கொல்ல

### எனக்கு உத்திரவிடப்பட்டது

### கவர்னர் முன் துப்பாக்கியை வைத்த ஈரானிய இளைஞன்

தெஹ்ரான், டிச. 16— "உம்மைக் கொல்லுமாறு எனக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது," என்று தெஹ்ரான் இராணுவ கவர்னரிடம் கூறி, 27-வயதுள்ள இளைஞனொருவன், துப்பாக்கி ஒன்றை அவர் முன் வைத்தானாம்.

தெஹ்ரான் கவர்னர், அரசியின் மருமான் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்செய்தியை சர்க்கார் அதிகாரி அப்பாஸ் கூறினர்.

இந்த இளைஞன், சர்க்கார் பாங்கியின் முன்னாள் ஊழியனாம்.

இந்த இளைஞன் இராணுவ கவர்னர்-ஜெனரல் பக்தியர் அலுவலகத்தில் நுழைந்து, அவர் முன்னே துப்பாக்கி ஒன்றை வைத்தானாம்; பின்னர், "உம்மைக் கொல்ல வேண்டுமென்று எனக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது; ஆனால், நான் கொலைக்காரன் அல்ல; உங்களிடம் சரண் அடைகிறேன்," என்று கூறினான்.

'நான் கம்யூனிஸ்டு கட்சியின் பயங்கர குழுவினைச் சேர்ந்தவன்,' என்றானாம், அந்த இளைஞன்.

'சர்க்கார், இந்த பயங்கரக் குழுவின் தலைவரைப் பிடித்துவிட்டனர்,' என்று அதிகாரி அப்பாஸ் கூறினர்.

# "அரசியல் சட்டத்தின் உயிருள்ள குரல்!"

## அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தில் ஒலிக்கிறது

### மக்கள் உரிமையை மதிக்கும் மாண்பு

அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தில் வழக்குகள் நடக்கும் போது, "அமெரிக்க அரசியல் சட்டத்தின் உயிருள்ள ஒலி" அங்கு கேட்கும். அரசியல் சட்டத்தின் உயிருள்ள குரல் கேட்கும்போது, அந்த ஒலியின் நாதம், நாடு முழுவதையும் அசைத்துவிடுகிறது.

### ஆட்சிக்கு அடிமைப்படாத நீதி நிர்வாகம்

அமெரிக்க ஜனநாயகத்தின் மூன்று அடிப்படைக் கற்களும், ஒன்று, ஒருவருக்கும் கீழ்ப்பட்டிராத சுதந்திரமான நீதி முறை. தலைமை நீதிமன்றத்திலுள்ள ஒன்பது நீதிபதிகளும், அந்த நீதிமுறையின் பிரதிநிதிகளாக விளங்குகிறார்கள்; சட்டத்திற்கு அமைந்த உரிமையை அவர்கள் பாதுகாக்கிறார்கள்; அரசியல் சட்டத்திற்கு அவர்கள் விளக்கம் கூறுகிறார்கள்; தனி மனிதருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாக்கிறார்கள்.

இந்த ஒன்பது நீதிபதிகளும் ரூஸ்வெல்ட், ட்ரூமன், ஐசனோவர் ஆகிய மூன்று ஜனாதிபதிகளால் நியமிக்கப்பட்டவர்கள்; ஆயினும், அவர்கள், நிர்வாக இலாகாவுக்கு உட்படாதவர்களாய், சுதந்திரமாய் தங்கள் கடமையை நிறைவேற்றுகிறார்கள். காங்கிரசுக்கும், அவர்கள் உட்பட்டவர்கள் அல்ல; காங்கிரஸ் செய்யும் சட்டம் அரசியல் சட்டத்துக்கு முரண்படுமாயின், அவர்கள், 'அது செல்லாது,' என்று தீர்ப்பளிக்கிறார்கள்.

உரிமை, சமத்துவமான நீதி என்னும் குறிக்கோள்களின் வன்மை மிக்க கோட்டையாய்த் தலைமை நீதிமன்றம் விளங்குகிறது.

அமெரிக்க ஜனநாயகம், தனி மனிதரின் உரிமைகளை வலியுறுத்துகிறது. அரசாங்கத்திற்கே அதிகாரம் அனைத்தையும் அளிக்கும் சர்வாதிகாரக் கொள்கைக்கும், அமெரிக்க ஜனநாயகத்துக்கும் உள்ள வித்தியாசம் இதுவே. சுதந்திரத்துக்குக் கேடு விளையாதபடி, இத்தனை ஆண்டுகளாக இந்த நீதி மன்றம் தடுத்து வந்திருக்கிறது.

நீதிமன்றத்தின் பெரிய வாயிலில் நின்று மக்கள் வருவதையும், போவதையும் நோக்கினால், 'உரிமைகள் மசோதா'வைப் பெரிய சொத்தாகப் பெற்ற அந்தமக்களைப் பார்க்கலாம்.

கருதுமாறு பேசும் உரிமை, தணிக்கை செய்யப்படாத பத்திரிகைகள், சமாதானமாய் கூட்டங் கூடும் உரிமை, குறைகள் போக்க அரசாங்கத்துக்கு முறையிடும் உரிமை ஆகியவற்றை, அமெரிக்க ஆட்சிமுறை அவர்களுக்கு வழங்கியிருக்கிறது.

# புதுவைப் பகுதிகளை இந்தியாவுடன் இணைப்பது இயலாது!

## தனி கலாச்சார பகுதியாக பாதுகாக்க முயற்சி

### கம்யூனிஸ்டுகளின் தொல்லைபற்றி நேருவின் அறிக்கை

"புதுச்சேரியை ஒரு தனிக் கலாச்சாரப் பிரதேசமாக வைத்திருக்கவும், அதன் மொழியையும், நடவடிக்கைகளையும் நீடிக்கவும் ஒப்புக்கொண்டிருக்கிறோம்,"

என்று பண்டித நேரு, பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

ஆனால் பாராளுமன்றம்தான் அதை முடிவு செய்ய வேண்டுமென்றும், அப்பகுதி மக்களின் சம்மதம் இன்றி எவ்வித மாறுதலும் செய்வதில்லை எனவும் நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்

"இப்போது அப்பகுதிகளை இந்தியாவுடன் இணைத்துவிடுவது என்ற பிரச்சினையே கிடையாது. இறுதியான இணைப்பு பூர்த்தியாகாத வரையில் நாம் அப்படிச் செய்ய முடியாது. ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி அதை ஒரே இரவில் செய்ய முடியாது; அது ஒருவேளை விரும்பத் தக்கதாகவும் இராது," என்றும் நேரு மேலும் கூறினார்.

முன்னாள் பிரெஞ்சுப் பகுதிகளின் நிர்வாகச் செலவு பற்றிய மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது, பண்டித நேரு குறுக்கிட்டு இவ்வாறு பேசினார்.

"பக்கத்து மாவட்டங்களுடன் இவைகளை இணைக்காமல் இருப்பதனால் அதிக பயன் விளையலாம்," என்றும் பண்டித நேரு கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"எல்லா வேலைகளும் முடிவடைய இன்னும் சிலகாலம் பிடிக்கும்; பிரெஞ்சுப் பாராளுமன்றத்தை, இவ்விஷயத்தில் துரிதமாகக் காரியமாற்றுமாறு அவசரப் படுத்துவது சரியாகாது."

பின்னர் புதுவைப் பகுதிகளின் கமிஷனரிடமிருந்து வந்த செய்தி ஒன்றை அவர் சபையில் படித்தார்:—

"ஐந்து நாட்களுக்கு முன்னர் ஏராளமான கம்யூனிஸ்டுகள் புதுவை முனிசிபல் கொம்யூனுக்குச் சென்றனர். சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த சாண்டியாகோ என்ற முனிசிபல் உறுப்பினர் ஒருவரை கம்யூனிஸ்டு கட்சியில் சேருமாறு கட்டாயப்படுத்தவே அவர்கள் சென்றனர். அவர் கம்யூனிஸ்டு கட்சியில் சேர மறுத்தார். கம்யூனிஸ்டுகள் சாண்டியாகோவின் மாமியாரை கத்தியால் குத்தினார்கள். பின்னர், கம்யூனிஸ்டுகள் மற்றொரு வீட்டுக்குச் சென்றனர்; அங்கே பாலசுந்தரம் என்பவரைத் தாக்கினார்கள்; இச்சம்பவத்தையொட்டி ஒன்பது கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது."

இச்செய்தியை நேரு படிப்பதற்கு முன், உறுப்பினர்களைப் பார்த்து சிரித்துக்கொண்டே, "இச்செய்தியில், 'கம்யூனிஸ்டு' என்ற சொல் காணப்பட்டால் உறுப்பினர்கள் என்னை மன்னிக்கவும்," என்றார்.

செய்தி படித்து முடிக்கப்பட்டதும் சில காங்கிரஸ் உறுப்பினர்கள் "வெட்கம், வெட்கம்" என்று கோஷமிட்டனர்.

# கழகச் செய்திகள்

## புதுக்குளம் தி. மு. கழகம்

30—11—54ல், இவ்வூர் முத்தமிழ் கலைமன்றத்தில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: எஸ். எஸ் மகாலிங்கம்; துணைச் செயலாளர்: ப. அருணுசலம்; பொருளாளர்: எம். கே. சாமி; மாவட்டப் பிரதிநிதிகள்: எஸ். எஸ். மகாலிங்கம், வே. ராமுக்கிளி. செயற் குழு உறுப்பினர்: எஸ். எஸ். மகாலிங்கம். மு. தங்கச்சாமி, த. இருளப்பன், க. சிவத்தையா, மா. தர்மராசன், எம். கே. சாமி, வி. தர்மராஜன்.

## ஈத்தாமொழி தி. மு. கழகம் அமைப்பு

3—12—54-ல் நாஞ்சில் மாவட்டத்தைச் சேர்ந்த ஈத்தாமொழியில், தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்று, கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: நீ. செல்லப்பெருமாள்; துணைச் செயலாளர்: அ. திரவியம்; பொருளாளர்: வே. நடராசன்; மாவட்டப் பிரதிநிதிகள்: ம. பொ. பத்மநாபன், கு. காளிதாஸ். செயற்குழு உறுப்பினர்கள்: நீ. செல்லப்பெருமாள், அ. திரவியம்; வே. நடராசன், ம. பொ. பத்மனுபன், கு காளிதாஸ், சி. சின்னக்கண்ணு, இரா. சிவசுப்பிரமணியம், தா. தங்கம், சு. செல்லப்பன், ப. நடேசன், பா. அரிராமன்.

## கும்மிடிபூண்டி தி. மு. க.

4—12—54 இரவு 7¼ மணி அளவில், பனபாக்கம் சிற்றூரில், கும்மிடிபூண்டி தி. மு. கழகச் சார்பில் ஓர் பிரசாரக் கூட்டம், அவ்வூர் திரு. வி. எஸ். இரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மக்கள் பெருவாரியாகக் கூடியிருந்தனர். ச. சி. புவியரசு அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசியபின் தோழர்கள் ப. செ. தூயமணி, ஆ. கிருஷ்ணன், இராதாமணாளன், இசையரசு ஆகியோர் கழகக் கொள்கைகளையும், தற்கால பொருளாதாரம் பற்றியும் திராவிட நாடு திராவிடருக்கு ஆகவேண்டியதின் அவசியம் பற்றியும், தற்காலத்தில் அரசியலில் காங்கிரஸ்காரர்கள் கையாளும் சூழ்ச்சி, பொதுமக்களை ஏமாற்றும் போக்கைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

## திருச்சி 20-வது வட்டார தி. மு. கழகம் (கிளை)

5—12—54 காலை 10 மணிக்கு, நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், சென்னை அரசாங்கம் புதிதாகக் கொண்டுவரவிருக்கும் நாடக சட்ட மசோதாவை வன்மையாகக் கண்டித்தும், அதனைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

## சைதாப்பேட்டை (வேலூர்) தி. மு. க. பொதுக்கூட்டம்

5—12—54ல், இங்கு நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி 'தி. மு. கழகத்தின் கடந்த காலப் போராட்டங்களும் பயனும்' என்பது பற்றியும், தோழர் மணிஎழிலன் 'திராவிட சமுதாயத்தின் இன்றைய இழிநிலைகள்' பற்றியும் பேசினர். தோழர்கள் இளஞ்செழியன், கருத்தோவியன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

## தாண்டானூர் தி. மு. கழகத் துவக்க விழா

6—11—54 காலை 10 மணிக்கு, தோழர் ஆ. பெரியசாமி தலைமையில் மேற்படி கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் எம். பி. சுப்பிரமணியம் கொடியேற்றி வைத்தார். தோழர் இரா. நெடுஞ்செழியன் கழகத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினர். தோழர் ஈ. ஆர். கிருஷ்ணனும் சொற்பொழிவாற்றினர்.

## பனமடல் தி. மு. கழகத் துவக்க விழா

6—11—54 காலை 9 மணிக்கு தோழர் ஆ. தியாகராசன் தலைமையில், மேற்படி துவக்க விழா நடைபெற்றது. தோழர் ஏ. ஆனைமுத்து கொடியேற்றினர். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கழகத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினர். தோழர் ஈ. ஆர். கிருஷ்ணனும் சொற்பொழிவாற்றினர்.

## சேந்தமங்கலம் தி. மு. க. (கிளை) அமைப்பு

இவ்வூர் கழகத் தோழர்கள், 7—12—54ல் கூடி, இவ்வூரில் ஓர் கிளைக் கழகம் நிறுவுவதென முடிவு செய்து அதற்கான நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: கே. கிருஷ்ணன்; துணைச் செயலாளர்: அ. இளங்கோவன்; பொருளாளர்: ஐ. ராமசாமி; மாவட்டப் பிரதிநிதி: எஸ். ஆர். கிருஷ்ணன். பின்னர், 19—12—54ல் கழகத் திறப்பு விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

## நிலக்கோட்டை தி. மு. இளைஞர் கழகம்

7—12—54 இரவு 9-30 மணியளவில் தோழர் ஒ. ச. மு. ச. நடராசன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், சென்னை சர்க்காரின் புதிய நாடக தடைச் சட்ட மசோதாவையும், மதுரையில் நடைபெற்ற கலவரத்தையும் கண்டித்தும், கழக 5-வது ஆண்டுவிழாவை, 30-ந் தேதியன்று நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆண்டு விழாவைச் சிறப்புற நடத்த 13 பேர் கொண்ட விழா குழுவும் அமைக்கப்பட்டது.

## பம்பாய் —: கொலாபா தி. மு. கழகம்

10—12—54 காலை 10 மணியளவில், கூபரேஜ் திடலில், தோழர் ஆர். ஜே. ஜார்ஜ் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்களின் மாதாந்திரக் கூட்டத்தில், சில தீர்மானங்கள் விவாதத்துடன் நிறைவேற்றப்பட்டன.

## வருந்துகிறோம்

அய்யம்பேட்டை திராவிட கழகப் பிரமுகரான திரு. கரும்பாயிரம் அவர்கள், இம்மாதம் 13-ந் தேதியன்று வயிற்றுவலி நோயினால் திடீரென தனது 104-வது வயதில் இயற்கை எய்தியதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

அய்யம்பேட்டையில் அவருக்கிருந்த ஒரு பங்களாவை திராவிட கழகத்துக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் வாடகை ஏதும் இல்லாமலேயே கொடுத்திருந்தார்.

அய்யம்பேட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் அவரது மறைவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது—நமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். —(ஆ-ர்)

* * *

திருப்பூர் நகர தி. மு. கழகச் செயலாளர் எம். அண்ணமலை அவர்களின் மூத்த சகோதரி பொன்னம்மாள் 15—12—54-ல் இயற்கையெய்தினர் என்பதை வருத்தத்துடன் அறிவித்துக் கொள்ளுவதுடன், இவ்வூர் கழகச் சார்பில் அனுதாபமும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## பட்டிவீரன்பட்டியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

11—12—54 மாலை, இவ்வூரில், தோழர் பால்சாமி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எஸ். முத்து, டி. வி. நாராயணசாமி, எஸ். எல். ராசேந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## செங்காட்டுப்பட்டியில் தி. மு. க. துவக்க விழா

11—12—54 மாலை 6 மணிக்கு, தோழர் பெ. மு. அரங்கசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி கழக துவக்க விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர் அரு. ஆதிமூலம் அனைவரையும் வரவேற்றுப் பேசியபின், தோழர்கள் கிருஷ்ணசாமி, தி. வி. முத்துகிருஷ்ணன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். பின்னர் பெருமாள்மலை — வேங்கிடத்தகனூர் சாலையில் கீரம்பூர் ஏரிக்கரையை அகலப்படுத்தி போக்குவரத்து வசதி செய்ய திருச்சி மாவட்டக் கழகத் தலைவரைக் கேட்டுக்கொண்டும், புதிய நாடக சட்டத் திருத்த மசோதாவைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டும் கல்லக்குடி அறப்போரில் உயிர் நீத்த தோழர்களின் குடும்பத்தாருக்கு உதவியளிக்க சர்க்காரைக் கோரியும், கண்ணனூர், குருவட்டத்தை சமுதாய அபிருத்தித் திட்டத்தில்சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பட்டம் தாணுவை ஆதரிப்பதா? இல்லையா?

## முடிவு கட்டும் உரிமை மாநில காங்கிரசுக்கே!

"திரு—கொச்சி ஆட்சியிலிருக்கும் ம. சோ. கட்சி சர்க்கார், சட்ட சபையில் கொண்டுவரும்பிரேரணைகள் சம்பந்தமாக சட்ட சபை காங்கிரஸ் கட்சி இனிமேல் தனது இஷ்டப்படி நடந்துகொள்ளலாம்" என்று, மத்திய காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அக்குழு நிறைவேற்றியுள்ள அத்தீர்மானத்தில் மேலும் கண்டிருப்பதாவது:—

"ம. சோ. கட்சி சர்க்கார் கொண்டுவரும் ஒரு மசோதா, தனது (காங்கிரஸ்) கொள்கைகட்கு முரண்பட்டதாகவோ, அல்லது மாநிலத்தின் பொது நலனுக்கு விரோதமானது என்றோ கருதுமானல், காங்கிரஸ் கட்சி, அம்மசோதாவை எதிர்க்கலாம்; அல்லது மாற்றுப் பிரேரணை கொடுக்கலாம்."

ம. சோ. கட்சி சர்க்காருக்கு அளித்துவந்த ஆதரவை காங்கிரஸ் நிறுத்திக்கொள்வதென பிரதேச காங்கிரஸ் முடிவு செய்துகொண்டதற்கு நியாயமான காரணங்கள் இருந்தாலும், மாநிலத்தில், ஜனாதிபதியின் நேரடி ஆட்சி ஏற்படுத்துவதில் கொண்டுபோய்விடக் கூடிய எந்த நடவடிக்கையையும் காங்கிரஸ் கட்சி நன்கு யோசிக்காமல் மேற்கொண்டுவிடக் கூடாது எனவும் அக்குழு கருதுவதாகத் தெரிகிறது.

* * *

### ராஜினமா எப்பொழுது?

"சட்ட சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டால், அல்லது ஏதாவதொரு பெரிய பிரச்சினை தோற்கடிக்கப்பட்டால் நாங்கள் இராஜினமாச் செய்வோம்; அதுவரையிலும் பதவியில் இருந்துதான் வருவோம்."

இவ்வாறு, திரு—கொச்சி முதலமைச்சர் பட்டம் தாணு கூறியிருக்கிறார்.

மந்திரி சபை தோற்கடிக்கப்பட்டால், பொதுத் தேர்தல் நடத்தப்படுவதையோ அல்லது பிற கட்சிகளின் ஆதரவுடன் மந்திரி சபை அமைப்பதற்கான முயற்சி செய்வது பற்றியோ பின்னர் ஆலோசிக்கப்படும்' " என்றும் தெரிவித்திருக்கிறார்.

## தோரமங்கலம் தி. மு. க.

11—12—54 இரவு 7 மணிக்கு தோழர் ஆண்டியப்பன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், தோரமங்கலம் கிராமம் புடையர் தெருவிலிருந்து சலகண்டபுரம் போக கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாதை ஒன்று போட்டுத் தருமாறு சென்னை அரசியலாரை கேட்டுக்கொண்டும், தோரமங்கலம் பஞ்சாயத்து போர்டிற்கு மீண்டும் தேர்தல் நடத்தவேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், நாடகச் சட்ட திருத்த மசோதாவைக் கைவிடக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## காரமடையில் தி. மு. கழக பொதுக் கூட்டம்

12—12—54 மாலை இவ்வூர் காந்தி மைதானத்தில் தோழர் நல்லூரான் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'திராவிட நாட்டுப் பிரிவினை'யின் நன்மைகள் பற்றியும், தி. மு. கழகக் கொள்கைகள் பற்றியும் விரிவுரையாற்றினர்.

## திருச்சி—தாராநல்லூர் தி. மு. கழகம் (கிளை)

12—12—54 காலை 9 மணிக்கு திருச்சி தேவர்மன்றத்தில் தோழர் எஸ். நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கிளைக் கழக ஆண்டு விழாவில் தோழர் ஈ. வெ. கி. சம்பத், சிற்றுளி-சுப்ரமணியம், எம். எஸ். மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். பின்னர், சென்னை சர்க்கார் கொண்டுவரவிருக்கும் நாடக சட்டத் திருத்த மசோதாவைக் கைவிடும்படி வற்புறுத்தியும், 11—12—54ல் திருச்சியில் நடைபெறவிருந்த 'இராமாயண' நாடகத்திற்கு ஒரு சிலரின் விஷமத்தனமான தூண்டுகோல் காரணமாக, திருச்சியில் 144 தடை உத்தரவு போட்டிருப்பதைக் கண்டிப்பதுடன், தடை உத்திரவை உடனடியாக அரசாங்கம் வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், திருச்சி நகரில், திராவிட இயக்கத்தவர் மீது ஒரு சில பார்ப்பனர்கள் வேண்டுமென்றே துவ்ப்பிரசாரம் செய்து, நகரில் குழப்பங்களை உண்டுபண்ணி வருவதைத் தடுத்து, அவர்கள் மீது தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு அமைதியை நிலை நாட்ட சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தென்காசியில் தி. மு. க. பொதுக் கூட்டம்

12—12—54ல், சிங்கை சு. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ஆ. திராவிடமணி, டி. குருசாமி, அப்துல் காதர் ஆகியோர் கழக வளர்ச்சி குறித்துப் பேசிய பின், நாடக சட்ட மசோதாவைக் கைவிடக் கோரியும் திரு—தமிழகத்தை தாய்த் தமிழகத்துடன் இணைக்கவேண்டும் என்றும் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

## தேனி தி. மு. கழகம்

15—12—54ல், தோழர் எஸ். மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், புதிய நாடக சட்ட திருத்த மசோதாவைக் கைவிடுமாறு கோரியும், மதுரை கலவர நிகழ்ச்சிகட்குக் காரணமானவர்கள் மீது அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்காமலிருப்பதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அரிமழம் தி. மு. கழகம்

14—12—54ல், தோழர் மு. மெய்யப்பன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுவின் சிறப்புக் கூட்டத்தில் கல்லக்குடி போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்கட்கு நிதி திரட்டும் பணியில், தன்னுடையஒத்துழைப்பைத்தருவதெனவும், புதிய நாடகச் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெறுதலுக்கான ஏற்பாடுகளைச் சென்னை முதல்வர் செய்வாரென செயற்குழு எதிர்பார்க்கின்றதெனவும், தமிழ் மொழி அரசாங்க மொழியாக ஆக்கப்படவேண்டும் என்று சென்னை அரசியலாரைக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர், இரா. நெடுஞ்செழியன், எம். எஸ். மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

## விலகிக் கொண்டேன்

கம்யூனிஸ்டு கட்சி சென்னை ஜில்லா குழு உறுப்பினராக இருந்துவந்த இராயபுரம் ஏ. ஜி. வீரப்பன் அவர்கள் பின்வருமாறு அறிவிக்கிறார்:—

"கடந்த ஐந்தாண்டுகளாக இந்திய கம்யூனிஸ்டு கட்சி சென்னை ஜில்லா கமிட்டியில் அங்கம்வகித்து வந்த நான், அக்கட்சியைவிட்டு விலகி சில மாதங்களாகிவிட்டன. இனி எனக்கும் இந்தியகம்யூனிஸ்டு கட்சிக்கும் கிளை ஸ்தாபனங்களுக்கும் யாதொரு தொடர்பும் இடையாது."

# வெளிநாட்டு நிபுணர்களை அழையாதீர்!

## உள்நாட்டவரின் திறமைக்கு சந்தர்ப்பமில்லை!

### எஞ்சினீயர் நிலை பற்றி விஸ்வேஸ்வரய்யா கருத்து

பூனு, டிச. 15—

"உலகின் எல்லா பகுதிகளிலிருந்தும் உள்நாட்டில் தொழிற்சாலைகள் அமைக்க எஞ்சினியர்களை அழைப்பது உள்நாட்டு திறமை விருத்தியாவதைப் பாதிப்பதாகும்," என்று, இந்தியத் தொழில் நிபுணர்களில் ஒருவரான டாக்டர் விஸ்வேஸ்வரய்யா கூறியுள்ளார்.

பூனு நகர எஞ்சினீயரிங் கல்லூரி நூற்றாண்டு விழாவில் படிக்கப்பட்ட அவர் அறிக்கையில் இவ்வாறு காணப்படுகிறது.

இப்படி வெளிநாட்டிலிருந்து பலரை அழைப்பதால், உள்நாட்டில் திறமையுடனும் ஆர்வத்துடனும் உள்ள எஞ்சினீயர்களின் திறமைக்கு சந்தர்ப்பம் இல்லாது போய்விடுமென்றும், உள்நாட்டவர் தாங்களாகவே திட்டமிடும் தன்மையை இழந்துவிடுவார்கள் என்றும் அவர் கண்டித்துள்ளார்.

# ஷெட்யூல் வகுப்பினர் முன்னேற்றம்

அரசாங்கத் திட்டம் பற்றி மந்திரி

கீழ்க்கண்ட அபிவிருத்தித் திட்டங்கள், அரிஜன முன்னேற்றத்திற்கான வகையில் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக அமைச்சர் பரமேஸ்வரன் சென்னை சட்டசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கல்வி

பள்ளிகள் நடத்துவது, கல்வி கற்க சகாயநிதி உதவுவது, மாணவர்களுக்கு சாப்பாட்டு வசதி தருதல்.

சுகாதாரம்

வீட்டு வசதி, சாலைகள் அமைத்தல், இடுகாடு அமைத்தல், கிணறுகள் வெட்டித் தருதல்.

இவையன்றி, கள்ளர், குறவர் ஆகிய வகுப்பினருக்கு பரீட்சைக்குப் பணம் கட்டுதல் முதலிய வசதிகளைச் செய்து தருதல் போன்றவற்றிற்கான திட்டங்கள் மாநில அரசாங்க அரிஜன இலாகா அதிகாரியால் நிறைவேற்றப்படுவதாக மந்திரியார் தெரிவித்திருக்கிறார்.

## மேலும் பஸ் வசதி

சுமார் 70 பிரயாணிகள் பிரயாணம் செய்ய வசதியளிக்கக் கூடிய பெரிய பஸ்கள் மேலும் சிலவற்றை அடுத்த ஆண்டிலும் (1955-56) நகர உபயோகத்துக்காக வாங்க உத்திரவிட்டுள்ளதாக சென்னை சட்ட சபையில் போக்குவரத்து அமைச்சர் பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போது சர்க்கார் போக்குவரத்து இலாகாவிடம் 395 பஸ்கள் இருப்பதாகவும் மேலும் ரூ. 30 லட்சம் மதிப்பில் 50 கனமான 'உசல்' பஸ்கள் 1954-55ல் வாங்க உத்திரவிடப்பட்டுள்ளதென்றும், அதில் 14 பஸ்கள், நகரசாலைகளில் போக்குவரத்துக்காக விடப்பட்டுள்ளனவென்றும், மீதியிருக்கிற 36 பஸ்களும் அடுத்த ஆண்டு பிப்ரவரி திங்கள் இறுதிக்குள் விடப்படுமெனவும் மேலும் அவர் கூறினார்.

## கல்வி இலாகா தலைமை அதிகாரி நியமனம்

சட்டசபையில் விளக்கம்

"இப்போது நியமிக்கப்பட்டுள்ள கல்வி இலாகா டைரக்டர், கல்வி இலாகா விதிகளுக்குக் கட்டுப்பட்டே நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவி 'செலக்ஷன்' பதவியேயாகும்," என்று சென்னை சட்டசபையில், கேள்விகட்குப் பதிலிறுக்கையில் நிதியமைச்சர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், 'யாரை வேண்டுமானாலும் சர்க்கார் பதவியில் நியமிக்க முடியும்,' என்றும் குறிப்பிட்டார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், தற்போதைய கல்வி இலாகா டைரக்டரைவிட 'சீனியரா'க ஒருவர் அவ்விலாகாவில் இருந்தாரென்றும், அவ்விருவரின் தகுதிகளையும் கவனித்து ஒருவருக்குப் பதவி கொடுக்கப்பட்டது என்றும் தெரிவித்தார்.

## திருப்பித் தரப்படும்

கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறி, சில ஆசிரியர்களின் 'சர்டிபிகேட்டு'களை ரத்து செய்திருந்ததை திருப்பிக் கொடுத்துவிடுமாறு சர்க்கார் உத்திரவிட்டுள்ளதென்று நிதியமைச்சர், சென்னை சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

## பனியன் தொழிற்சாலை

கோவை மாவட்டத்திலுள்ள சூலூரில் ஒரு பனியன் தொழிற்சாலையை ஆரம்பிக்க சென்னை சர்க்காரின் உதவி கோரி, முன்னாள் இராணுவத்தார் சங்கத்

# தென்னாட்டில் உருக்கு தொழிற்சாலை?

ரஷிய நிபுணர் குழு ஆராயும்

சென்னை, டிச. 20—

இந்தியாவில் மேலும் ஒரு எஃகுத் தொழிற்சாலையை நிறுவுவது பற்றி ஆராய்ச்சி நடத்தி ஆலோசனை கூறுவதற்காக இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்தியா வந்துள்ள 14 பேர் அடங்கிய ரஷிய நிபுணர் குழு சென்னைக்கு வருகை தந்துள்ளது.

அவர்கள் தென்னாட்டில் ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிறுவுவதற்குத் தேவையான அம்சங்கள் குறித்து சென்னை அரசாங்க அதிகாரிகளுடன் விரிவானதோர் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள் என அறியவருகிறது.

நிபுணர் குழுவினர் இதுவரை மத்திய பிரதேசம், பீகார், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துள்ளனர். இன்றிரவு அவர்கள் பெங்களூர் புறப்படுவார்கள்.

## சென்னை துறைமுக அபிவிருத்தி

ரூ. 20 லட்சம் அனுமதி

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை துறைமுக அபிவிருத்திக்கான வேலைகளில் ரூ. 20 லட்சம் செலவில் புதிதாக நான்கு திட்டங்கள் இப்போது சேர்க்கப்பட்டிருக்கின்றன. ரூ 5 லட்சம் செலவில் புதிய ஒரு மருத்துவ மனையும், மருந்துச்சாலையும் கட்டப்படும். துறைமுகத் தொழிற்பட்டறையின் அபிவிருத்திக்கு மேலும் அதிகமாக இயந்திர சாதனங்களும், உபகரணங்களும் பொருத்தப்படும்.

ரூ. 6 லட்சம் செலவில் புதியதொரு கிடங்கு கட்டப்படும்.

துறைமுகத்தில் களவு போவதைத் தடுப்பதற்காக, பாதுகாப்பு வசதிகளைப் பலப்படுத்தும் பொருட்டு சுமார் 1 லட்ச ரூபாய் செலவில் துறைமுக எல்லைச் சுவர் கடலில் மேலும் 4 அல்லது 5 அடிகள் வரை உயர்த்தி விரிவாகக் கட்டப்படும்.

## குண்டு போடப்படும்!

சென்னை நகரில் மீண்டும், நேரத்தைத் தெரிவிக்கும் குண்டுகள் போடப்படும் என்று கூறப்படுகிறது. மாலை 4 மணி நேரங்களில் சென்னை கோட்டை மைதானத்திலிருந்து நடைபெற்று வந்த இம்முறை, இரண்டாவது உலக யுத்த காலத் துவக்க சமயத்தில் நிறுத்தப்பட்டு விட்டிருந்தது.

சென்ற 1952-ம் ஆண்டு அக்டோபர் திங்களில், அதற்காக ரூ. 1925 செலவில் சென்னை நகரசபை ஒரு பீரங்கியைப் புதுப்பித்துக் கொடுத்தது. 1953 மார்ச்சில் மீண்டும் அக்குண்டு போடும் முறை ஆரம்பமாகியது. ஆனால் அதுவும் இரண்டே நாட்கள்தான் நடைபெற்றது. காரணம், அப்பீரங்கி 'மக்கர்,' செய்துவிட்டது!

இந்திய சர்க்கார், அப்பீரங்கியை 'இலவசமாக'வே பழுதுபார்த்துத் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளபடியால், காசிபூருக்கு அதை அனுப்பி வைக்கும்படி சென்னை இராணுவ அதிகாரிகட்கு இந்திய சர்க்கார் உத்திரவிட்டுள்ளதாம்.

## யூகோ வருமாறு நேருவுக்கு அழைப்பு

யூகோஸ்லேவியா ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ, பண்டித நேருவை தனது நாட்டிற்கு வருமாறு அழைத்திருக்கிறார் என்று தெரிகிறது.

காரியதரிசியிடமிருந்து வந்த கோரிக்கையொன்று சர்க்கார் பரிசீலனையிலிருக்கிறதாக நிதிமந்திரி சென்னை சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

# அண்ணாதுரை

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

**24—12—54:** மாலை 6 மணிக்கு சின்னாளப்பட்டி (மதுரை மாவட்டம்) தி. மு. கழகக் கட்டிடத் திறப்பு விழா பொதுக் கூட்டம்.

**25—12—54:** மாலை 6 மணிக்கு திண்டுக்கல் தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம்.

**26—12—54:** மாலை 6 மணிக்கு இடையக்கோட்டை (மதுரை மாவட்டம்) தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக் கூட்டம்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களுடைய சுற்றுப் பயண நிகழ்ச்சிகளில், தோழர்கள் கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார் ஆகியவர்களும் கலந்து கொள்வார்கள்.

## கழகக் கூட்டங்கள்

★

உலிபுரம்

தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா

21—12—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: க. பெ. ராமசாமி

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை
கே. ஏ. மதியழகன்
அ. பொன்னம்பலனார்

★

லெப்பைக்குடிக்காடு

தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா

வானொலி நிலையத்தில்

22—12—54 மாலை 6 மணிக்கு

கொடியேற்றுபவர்: அன்பில் தர்மலிங்கம்

தலைவர்: அ. பொன்னம்பலனார்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை
கே. ஏ. மதியழகன்
எம். எஸ். மணி
டி. பி. அழகமுத்து

★

லால்குடி

தி. மு. கழக ஆண்டு விழா

சிவன் கோவில் முன்பு

23—12—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: அன்பில் தர்மலிங்கம்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை
கே. ஏ. மதியழகன்
அ. பொன்னம்பலனார்
எம். எஸ். மணி

## அய்யம்பேட்டை தி. மு. கிளைக் கழக நான்காம் ஆண்டுவிழா

**22—12—54** மாலை 6 மணிக்கு அய்யம்பேட்டை (காஞ்சீபுரம்) பாடசாலைக்கு அருகில், அய்யம்பேட்டை தி. மு. கிளைக் கழக நான்காம் ஆண்டு விழாவும், தமிழ்க்கலை நூல் நிலைய இரண்டாம் ஆண்டு விழாவும் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி மற்றும் பலர் பேசுவர்.

அன்று இரவு 10-30 மணிக்கு, தோழர்கள் எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி முன்னிலையில் 'வழக்கு வாபஸ்' ஓரங்க நாடகமும், 'பரப்பிரம்மம்' நாடகமும் நடைபெறும்.

திருக்குறள் வகுப்பு

21—12—54 பிற்பகல் 2-30 மணிக்குமேல், சென்னை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில் 'வெஃகாமை' என்பது குறித்து தோழர் மயிலை சிவமுத்து, தோழியர் கமலாம்பாள் ஆகியோர் பேசுவர்.

# தோட்டத்தொழிலாளர்மீது துப்பாக்கிப் பிரயோகம்!

## அரிசிப் பங்கீடு தர மறுக்கும் தோட்ட முதலாளியின் கொடுமை

17 பேருக்குக் காயம்; 3 பேர் நிலைமை கவலைக்கிடம்?

கொழும்பு, டிச. 19—

மதுல்சிமா பகுதியில் உள்ள ஹாப்டனில் தோட்டத் தொழிலாளர்கள்மீது போலீசார் சுட்டனர். இதன் விளைவாக பதினேழு பேர் காயமடைந்தனர் என்று தெரிகிறது.

வேலை நிறுத்தம் செய்துள்ள மூன்று எஸ்டேட் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரிசி பங்கீட்டைக் கொடுக்க தோட்ட அதிகாரிகள் மறுத்துவிட்டனர். வழக்கமாக அரிசியைக் கடனாகப் பெற்றுக் கொள்வார்கள் என்றும், அத்தொகை, அவர்கள் கூலியில் பிடித்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது.

அரிசி பங்கீட்டை மறுத்தால் தொழிலாளர்கள் உடனே வேலைக்குத் திரும்பிவிடுவார்கள் என்ற நம்பிக்கையில், அதிகாரிகள் அவ்வாறு செய்தனர் என்று தெரிகிறது. ஆனால் தொழிலாளர்கள் இப்போது அறப்போர் நடத்துகின்றனர்.

அரிசி பங்கீடு மறுக்கப்பட்டவுடன், அன்று மாலையே தொழிலாளர்கள் அறப்போர் துவங்கினர். நேற்று ஹாப்டனில் அறப்போர் நடத்தும் தொழிலாளர்களை பிரம்பால் அடித்தார்களாம். பிரம்படியினால் தொழிலாளர்கள் கலைந்து போக மறுக்கவே போலீசார் தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம். இதனால் காயமுற்ற 17 பேர்களில் மூன்று தொழிலாளர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறதாம்.

இப்போது இலங்கையில் பசாரா, லுங்கலா நூவரேலியா, அனயூயா ஆகிய பகுதிகளில் சுமார் முப்பதாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

# காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வித்திட்ட விஷயத்தில், ஏற்பட்ட வெகுவான எதிர்ப்புக்கு இணங்க மறுத்து, அதை ஏளனம் செய்தது போன்றே, முதல் மந்திரி காமராசரும், நாடக மசோதா விஷயத்தில், எதிர்ப்பை அலட்சியப்படுத்தி நடக்கத் திட்டமிட்டு விட்டார். இரண்டிலும் உள்ளடங்கி உள்ள தத்துவம் ஒன்றேயாகும்.

தத்துவம் ஒன்றுனாலும்—வித்தியாசம் தரத்தில் இருக்கத்தான் இருக்கிறது. தர வித்தியாசம் இருக்கிற காரணத்தினால், செயலில் இருக்கும் தவறு இல்லாமற் போய்விடாது. ஒரு செயல் தவறு என ஏற்பட்ட பிறகு, அதற்கான விளைவும் எதிர்பார்க்கக்கூடியதே. விளைவு உடனடியாகத் தென்படாமல் இருக்கலாம்; நாள் சென்றுவது ஏற்படாமல் இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

பொதுமக்கள் எதிர்ப்புக்கு, ஆட்சியாளர் இணங்க வேண்டுவது கடமை—மக்களாட்சியின் மாண்பு.

எதிர்ப்பை மதிக்காது நடப்பது எதேச்சாதிகாரம்—சட்டத்திற்குட்பட்ட சர்வாதிகாரம்—நாட்டைக் கொந்தளிப்புக்குள்ளாக்கும் குணமற்றதனம்.

முதல் மந்திரி கருதுவதுபோல், எதிர்ப்புக்கு அஞ்சுவதல்ல; பொதுமக்கள் விருப்பத்திற்கு இணங்குவது என்பது பொருள். இதில் புகழ் உண்டு; நாட்டுக்கு நலம் உண்டு.

நாடக மசோதா, சட்டமாவது கூடாது எனக் கட்சிக் கூட்டத்தில் கண்டித்துப் பேசினவர்கள், சட்ட சபை கூட்டத்தில், மசோதா சட்டமாவதற்கு உடந்தையாக இருக்கப் போகிறார்களாம். சொந்த மனச்சாட்சியைக் கட்டுப்பாடு எனும் பலி பீடத்தில் பலியிடத் தயாராகின்றனர், பொதுமக்கள் பிரதிநிதிகள்! இத்தகு இருமனத்தினரை எப்படித்தான் பொது மக்கள் நம்புவதோ? அந்தோ ஜனநாயகமே? உன் புகழ்பாடி உன்னைக் கொலை செய்யக் கிளம்பும் குணாளர்களிடமிருந்து, நீ, என்றுதான் மீளப் போகிறாயோ?

## ஷாபி முகம்மது காலமானர்

சென்னை, டிச. 19—

சென்னை முன்னாள் ஷெரீப் திரு. எஸ். ஏ. ஷாபி முகம்மது, இன்று அதிகாலை 4 மணி சுமாருக்கு நுங்கம்பாக்கத்தில் உள்ள தமது 'ஆஷியானா' வீட்டில் மரணமடைந்தார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவருக்கு இப்போது வயது 62 ஆகிறது. அவருக்கு 7 புதல்வர்களும் 4 பெண்களும் இருக்கின்றனர்.

இறந்துபோன அவரது சடலம், நுங்கம்பாக்கத்திலிருந்து திருவல்லிக்கேணிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, ஹாமில்டன் வாராவதிக்கருகில் உள்ள ஹஜாத் தஸ்தகீர் சாகிப் தர்காவில் அடக்கம் செய்யப்பட்டது.

## மத குருவின் நிர்வாண ஊர்வலம்

பம்பாய் மக்கள் களிப்பு

ஒரு சமண மதகுரு நிர்வாண கோலத்துடன் பம்பாய் நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். அந்த நிர்வாண கோலத்துடன் ஊர்வலம் வந்த மேற்படி சாமியாரைத் தரிசிக்க ஆயிரமாயிரம் மக்கள் கூட்டம், சாலைகளின் இரு வீதிகளிலும் ஒருவரையொருவர் மிதித்துத் தள்ளிக்கொண்டு கூடியிருந்தனராம்.

அவர் நிர்வாணமாகவே இருந்த போதிலும், நிர்வாண கோலத்திலேயே மக்கள் பார்க்க முடியாதவாறு அவரைச் சுற்றிலும் திரையிடப்பட்டிருந்ததாம்!

சென்ற செவ்வாய்க் கிழமை அன்றே நிகழவிருந்த ஊர்வலம் போலீசாரால் மறுக்கப்பட்ட போதிலும், அவ்வூர்வலத்திற்கான அனுமதி மாநில முதலமைச்சரிடம் கேட்கப்பட்டபோது, 'மத குருவைத் திரையிட்டு அழைத்துச் செல்லலாம்' என்ற நிபந்தனையின் மீது அவர் அனுமதி கொடுத்தாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,